Vazhga Vaiyagam



Founder Father
Thathuvagnani Vethathiri Maharishi

**SKM. MAEILANANDHAN**
**PADMASHRI AWARDEE**
PRESIDENT

# The World Community Service Centre

**An Organization For Yoga And Spiritual Education**
( Estd.1958 Regd.Under Tamil Nadu Societies Registration Act. )
26,Second Seaward Street, Valmiki Nagar, Thiruvanmiyur,
Chennai - 600 041. Tamilnadu. India
Tel : 044 - 24571153, 24571264, Mobile : 94451 79431
E-Mail : chennai.wcsc@vethathiri.ac.in
web : www.vethathiri.edu.in

Vazhga Valamudan

**Dr. S. SEKHAR**
GENERAL SECRETARY

18.05.2022

பெறுதல்

உலக சமுதாய சேவா சங்கத்தின் அனைத்து மண்டலத்
தலைவர்கள் / செயலர்கள் / பொறுப்பாளர்கள்

அன்புடையீர்!

பொருள்: ஜுன் 21 அன்று அனைத்து மாவட்டங்களிலும் சர்வதேச யோகா தினம் **(International day of yoga)** கொண்டாடுவது சம்பந்தமாக.

வணக்கம். வாழ்க வளமுடன்.

பாரதப் பிரதமர் மாண்புமிகு நரேந்திரமோடி அவர்களின் முயற்சியின் காரணமாக ஆண்டுதோறும் ஜுன் மாதம் 21ம் தேதி சர்வதேச யோகா தினம் உலகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருவதை தாங்கள் அறிவீர்கள்.

உலக சமுதாய சேவா சங்கத்தின் சார்பில் கடந்த சில ஆண்டுகளாக சர்வதேச யோகா தினம் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டத் தலைநகர்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டும் அதே போல் அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான வழிகாட்டுதல்கள் பின்வருமாறு.

- ஒவ்வொரு மண்டலத்திலுமுள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் சர்வதேச யோகா தினம் கொண்டாடவேண்டும்.
- சர்வதேச யோகா தினம் ஜுன் 21ம் தேதி அன்றே நடத்தப்பட வேண்டும்.
- மாவட்டத் தலைநகரில் ஏதாவது ஒரு பொது மைதானம், அரங்கம், கல்லூரிகள், பள்ளிகள் அல்லது அறிவுத்திருக்கோயிலிகள் விழா நடத்தலாம். அதிகம் பொருட் செலவில்லாமல் நடத்திக் கொள்ளலாம்.
- விழா காலையில் அல்லது மாலையில் ஏதேனும் ஒரு நேரத்தில் சுமார் 1 மணி நேரம் 15 நிமிடம் அளவில் நடத்தலாம்.
- மாவட்ட ஆட்சித்தலைவர், காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர் இது போன்ற அரசு உயர் அதிகாரிகளில் யாரேனும் ஒருவரது தலைமையில் விழாவை நடத்த வேண்டும்.

Vazhga Vaiyagam



Founder Father
Thathuvagnani Vethathiri Maharishi

**SKM. MAEILANANDHAN**
**PADMASHRI AWARDEE**
PRESIDENT

SKY
Estd in 1958

# The World Community Service Centre

**An Organization For Yoga And Spiritual Education**
**( Estd.1958 Regd.Under Tamil Nadu Societies Registration Act. )**
26,Second Seaward Street, Valmiki Nagar, Thiruvanmiyur,
Chennai - 600 041. Tamilnadu. India
Tel : 044 - 24571153, 24571264, Mobile : 94451 79431
E-Mail : chennai.wcsc@vethathiri.ac.in
web : www.vethathiri.edu.in

Vazhga Valamudan

sky Yoga

**Dr. S. SEKHAR**
GENERAL SECRETARY


- யோகாசனங்கள், உடற்பயிற்சிகள் ஆகியவற்றில் நன்கு தேர்ச்சி பெற்ற மனவளக்கலை ஆசிரியர்கள் / அன்பர்கள் பயிற்சிகளை செய்து காண்பிக்க வேண்டும். அதற்கான **CD** மற்றும் விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.
- பயிற்சி செய்பவர்கள் ஆண்கள், பெண்கள் இருபாலரும் சீருடை அணிந்து வர வேண்டும்.
- நாளிதழ்கள் மற்றும் உள்ளூர் **TV**களில் விழா நிகழ்ச்சி பற்றிய செய்திகள் வருவதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
- விழா நடந்தவுடன் புகைப்படங்களை சென்னை தலைமை சங்கத்திற்கும், அன்பொளிக்கும், **Facebook** மற்றும் விரிவாக்க இயக்குனரகத்திற்கும் உடனே மெயிலில் அனுப்பி வைக்க வேண்டும்.
- விழா முடிவில் தேநீர் மற்றும் பிஸ்கட் வழங்கலாம். அதற்கான செலவினை மண்டலம் **sponsor** பெற்று செய்ய வேண்டும்.
- விழாவின்போது பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைத் தவிர்த்து பயிற்சிக்கு உரிய நேரம் கொடுக்கவும்.
- வாழ்த்துரை தேவையில்லை. முக்கியப்பிரமுகர்கள் முன்னிலை வகிக்கலாம்.
- பயிற்சி செய்யும் ஆசிரியர்களுக்கு அறக்கட்டளைகளில் நன்கு ஒத்திகை (**Rehearsal**) கொடுக்க வேண்டும்.
- பயிற்சிகள் செய்யத் தேவையான விரிப்புகள், **Audio system** ஆகியவற்றை ஏற்பாடு செய்யவேண்டும்.
- மண்டலங்களில் உள்ள அறக்கட்டளைகளில் யோகா தினம் நடைபெறும் இடம் மற்றும் விபரங்களை இம்மாத இறுதிக்குள் சென்னை தலைமை சங்கத்துக்கு மெயில் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்கண்ட வழிகாட்டுதல்களை பின்பற்றி சர்வதேச யோகா தினத்தை சிறப்பாக கொண்டாட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

குருவின் சேவையில்,

SKM. Maeil

(SKM. மயிலானந்தன்)
தலைவர்,
உலக சமுதாய சேவா சங்கம்

இணைப்பு : நிகழ்ச்சி நிரல்
நகல்: 1. WCSC - பொதுச்செயலர்
2. WCSC - விரிவாக்க இயக்குநர்